நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC/96/2015

வழக்கு சாட்சி : PW11 (LW23)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காமாட்சி | ஜாதி | : |
| கணவர்பெயர் | : ரவிசந்திரன் | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 61 / 2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **18.06.2025**

(1வது எதிரி ஆஜர். 2,3, எதிரிகள் ஆஜர் இல்லை. 2,3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.5வது எதிரி நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. )

**முதல் விசாரணை :**

நான் அடையார் மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்சமயம் சீர்காலியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 21.01.2013 ம் தேதி முதல் நாகப்பட்டினம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 10.06.2013 ம் தேதி நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவு ஆய்வாளர் தங்கராஜ் என்பவர் நிலையப் பொறுப்பில் இருந்த போது துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி பெறப்பட்ட புகார் மனுவை குற்ற எண் 7/2013 இ.த.ச. பிரிவுகள் 467,468,469,471 ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் செல்வராசு அவர்கள் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். பணி மாறுதலில் அவர் சென்றதால் என் பார்வைக்கு வைக்கப்பட்டதை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் நடராஜன் , தர்மராஜன், பாண்டியன், மாரிமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 17.10.2014 ம் தேதி மனோஜ்ராஜ், மார்ட்டின் மற்றும் முருகன், மணிமாறன் சார்பதிவாளர் இவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கின் 2வது எதிரி தியாகராஜன் என்பவரை 27.06.2015 ம் தேதி BSNL அலுவலகத்தில் வைத்து கைது செய்து JM1 court அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேலும் இந்த வழக்கில் Document வட்டாசியர் கீழ்வேளுர் அவர்களுக்கு தபால் கொடுத்து இந்த வழக்கில் மோசடி செய்த ஆவணங்களின் நகல் 41/c2, 41/4A கணினி சிட்டாடங்கள் இவைகளை பெறப்பட்டது. மேலும் 09.10.2013 ம் தேதி சடாட்சரம் என்பவர் அரசு வழக்கறிஞரிடமிருந்து பெற்ற கருத்துரையின் நகலை நான் பெற்றேன்.29.08.2013 புகார்தாரர் நடராஜ் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. நாகப்பட்டினம் அரசு உதவி இயக்குநரிடமிருந்து கருத்துரையை நான் பெற்றேன். சார்பதிவாளர் 06.03.2013 அன்று 953/1986,21/2011,184/2013,263/2013,1012/2031, இந்த சொத்தில் நகல்களை சார்பதிவாளர் அவர்களுக்கு தபால் கொடுத்து சான்றிட்ட நகல்களை பெற்றேன். புகார்

தாரர் நடராஜன் என்பவரிடமிருந்து அவரது சொத்துகளின் முழு விபரங்களை பட்டியல் வகைப்படுத்தி வாங்கப்பட்டது. நாகப்பட்டினம் அரசு உதவி இயக்குநரிடமிருந்து கருத்துரையை நான் பெற்று எதிரிகள் மீது 27.07.2015 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

புகார்தாரர் நடராஜன் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி புகார் கொடுக்கவில்லை. காவல் துணை கண்காணிப்பாளருக்கு புகார் தபால் மூலம் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரி. புகார்தாரர் நடராஜனை எத்தனை முறை விசாரித்தேன் என்றால் ஒரு முறை தான் விசாரித்தேன். என்ன தேதி என்றால் 11.06.2013. புகார்தரார் நடராஜனை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்கள் என்றால் 23.09.2014 அன்று அவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மறு வாக்குமூலத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. சாட்சிகளின் வாக்குமூலங்களை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்றால் சரிதான். சாட்சி நடராஜனிடம் பெறப்பட்டதாக சொல்லப்படும் வாக்குமூலங்கள் 14.08.2015 அன்று நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது. சாட்சி நடராஜன் 14.10.2014 அன்று இறந்துவிட்டார். நடராஜன் இவ்வழக்கில் புகரர் எதுவும் அளிக்கவில்லை என்றும், அவரை நான் சாட்சியாக விசாரித்திருக்கவில்லை என்றும், புகாரானது தர்மராஜன் என்பவர் போலியாக நடராஜனின் கையொப்பமிட்டு தபால் மூலமாக புகாரினை அனுப்பியுள்ளார் என்றும்,தர்மராஜன் கொடுத்த அளுத்தத்தின் பேரில் நடராஜனை விசாரிக்காமல் , விசாரித்தாக போலியாக வாக்குமூலம் தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்திருக்கு நேரில் சென்று விசாரிக்கவில்லை. போலி ஆவணங்கள் என்று சொல்லப்படும் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட தேதிகளில் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சிசிடிவி பதிவுகளை கைப்பற்றவில்லை என்றால் சிசிடிவி கேமராக்கள் 2014 ம் ஆண்டு முதல் தான் பொறுத்தப்பட்டது. நடராஜன் எழுதி கொடுத்த 184/2013, 263/2013 இரண்டு செட்டில்மெண்ட ஆவங்களிலும் மேற்படி ஆவணங்களை எக்காரணத்தை முன்னிட்டும் ஆவணத்தை மாற்றுவதோ, ரத்து செய்வதோ இல்லை என்றும் , அவ்வாறு மாற்றினாலும் அது செல்லதக்கது அல்ல என்றும் உறுதிகூருகிறேன்

என்று கண்டுளள்து. என்றால் சரி. அரசு தரப்பு வழக்கில் 1 முதல் 3 எதிரிகள் சாட்சி நடராஜனை வற்புறுத்தி, மிரட்டி, நடராஜனின் கையொப்பத்தை கட்டாயப்படுத்தி நடராஜனின் கையெழுத்தை பெற்று மேற்படி செட்டில்மெண்ட் ஆவணங்கள் எதிரிகளால் தயார் செய்யப்பட்டுள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல.

நடராஜன் எழுதி கொடுத்த 184/2013 செட்டில்மெண்ட ஆவணத்தில் நடராஜனின் மனைவி அன்புகரசி சாட்சியாக கையெப்பமிட்டுள்ளார் என்றால் சரி. இவ்வழக்கில் அன்புகரசி சாட்சியாக விசாரிக்கபடவில்லை என்றால் சரி. சாட்சி கையெப்பமிட்ட மேற்படி நடராஜனின் மனைவி அன்புகரசியை சாட்சியாக இவ்வழக்கில் விசாரிக்காமல் விட்டதற்கான சிறப்பு காரணம் எதுவும் இல்லை. மேற்படி இரண்டு செட்டில்மெண்ட் ஆவணங்களும் நடராஜனின் சுய விருப்பத்தின்பேரில் யாருடைய அச்சுறுத்தலும், நிர்பந்தமும் இல்லாமல் தன் மகள் 1ம் எதிரிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த இரு ஆவணங்களும் போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இரண்டு ஆவணங்களையும் அனுசரித்து தாமரைச்செல்வி சொத்தின் அனுபவத்தை எடுத்துக் கொண்டு அவரது பெயரில் பட்டா பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி இரண்டு ஆவணங்களையும் ரத்து செய்வதற்கு நீதிமன்றம் மூலமாக ஏதேனும் உத்தரவு வாங்கி வந்தாரா என்றால் இல்லை. இந்த செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதி கொடுத்து , நடைமுறைக்கு வந்த பிறகு நடராஜன் அவர் மட்டும் த்னியாக ரத்து செய்ய இயலாது என்றால் சரியல்ல. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றும், ஆனால் தர்மராஜன் அழுத்தத்தின் பேரில் சட்டபடி செல்லதக்கது அல்லாத செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தை அடிப்படையாக வைத்து எதிரிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை மற்றும் அனைத்து ஆவணங்களும் நீதிமன்றதால் 14.08.2015 அன்று தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த வழக்கில் நான் நிலஅபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் காவல் ஆய்வாளர் என்ற அடிப்படையில் புலன்விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். நிலஅபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவானது தமிழ்நாடு அரசு ஆணை 423 தேதி 28.07.2011 மற்றும் 451 தேதி 11.08.2011 வாயிலாக தோற்றுவிக்கப்பட்டது என்றால் சரி. மேற்படி அரசு ஆணையானது சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை 10.02.2015 தேதிய தீர்ப்பின்

படி ரத்து செய்யப்பட்டு விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு மேற்படி அரசு ஆணைகள் ரத்து செய்யப்பட்ட பிறகு எவ்வித அதிகாரம் இல்லாமல் நான் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் வழக்கானது 2013 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது ஆகும். சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் 1வது எதிரியை நான் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சரியான வகையில் புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பு என்றும் சொன்னால் சரியல்ல.